தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 24-3-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**மரவள்ளி கிழங்கு விலை அதிகரிக்க வாய்ப்பில்லை**

இந்தியாவில், மரவள்ளி 2014-15 ஆம் ஆண்டில் 2.28 இலட்சம் ஹெக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு 4.37 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவை பெரும்பாலும் தமிழ்நாடு, கேரளா, நாகாலாந்து, மேகாலயா, ஆந்திரா மற்றும் அசாம் ஆகிய பகுதிகளில் பயிரிடப்படுகிறது. மரவள்ளிகிழங்கு சிப்ஸ், ஸ்டார்ச் மற்றும் சவ்வரிசி உட்பட பல வடிவங்களில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சகத்தின் படி, ஏப்ரல் முதல் டிசம்பர் 2015 வரை ரூ.18.19 கோடி மதிப்புள்ள கிழங்கை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது.

நம் நாட்டிற்கு தாய்லாந்து, வியட்நாம் மற்றும் இந்தோனேஷியா போன்ற நாடுகளிலிருந்து மரவள்ளி ஸ்டார்ச் இறக்குமதியாகிறது. சென்னை கடல் வழியே 34.9 சதவீதமும், விசாகப்பட்டினம் கடல் வழியே 28.5 சதவீதம் மற்றும் நவசேவா கடல் வழியே 25.1 சதவீதமும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. தாய்லாந்திலிருந்து ஸ்டார்ச் அதிகளவு இறக்குமதி செய்யப்பட்டதால் விலைச்சரிவை சந்தித்துள்ளது.

ஸ்டார்ச், மரவள்ளி உற்பத்தியில் மிக முக்கியமான மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்பு ஆகும். சேலம், நாமக்கல், ஈரோடு, தர்மபுரி மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் 650-க்கு மேற்பட்ட ஸ்டார்ச் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. கேரளாவில் சில ஸ்டார்ச் தொழிற்சாலைகள் வெள்ளை மற்றும் மஞ்சள் டெக்ஸ்டிரின் உற்பத்தி செய்கின்றன. ஸ்டார்ச் முக்கியமாக ஜவுளிதுறை, பசைகள், மருந்துகள், மிட்டாய்கள் மற்றும் காகித தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவில் உற்பத்தியாகும் மரவள்ளி ஸ்டார்ச் 80 சதவீதம் தமிழகத்திலிருந்தும் மீதம் ஆந்திரா மற்றும் கேராளாவிலிருந்தும் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவில் உற்பத்தியாகும் சவ்வரிசி 60-70 சதவீதம் தமிழ்நாட்டிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில், நாமக்கல், தர்மபுரி மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் மரவள்ளிகிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது. பொதுவாக, நவம்பர் - டிசம்பர் மாதங்களில்

மானாவாரி பயிராகவும், மார்ச் - ஏப்ரல் மாதங்களில் இறவை பயிராகவும் நடவு செய்யப்படுகிறது. மானவாரி மரவள்ளி கிழங்கானது அக்டோபர் மற்றும் பிப்ரவரி மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. மரவள்ளி கிழங்கு ஜூலை முதல் ஏப்ரல் வரை தொழிற்சாலைக்கு கிடைக்கிறது. அதிகபட்ச வரத்து அக்டோபர் முதல் பிப்ரவரி மாதம் வரை எதிர்பார்க்கலாம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், கடந்த 15 ஆண்டுகளாக சேலம் சந்தையில் நிலவிய மரவள்ளிகிழங்கு விலையை ஆராய்ந்தது.

ஆய்வின் விளைவாக, அறுவடை மாதங்களில் மானாவாரியில் பயிரிடப்படும் மரவள்ளி கிழங்கு பண்ணை விலையாக ஒரு டன்னிற்கு ரூ.2500-3000 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. விலை அதிகரிக்கும் வாய்ப்பு மிகவும் குறைவாகவே உள்ளது. எனவே, மரவள்ளிக்கிழங்கு விவசாயிகள் மேற்கண்ட விலையினை கருத்தில் கொண்டு நடவு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003
தொலைபேசி – 0422 -2431405

**<u>மேலும் தொழில் நுட்பவிவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி– 0422 -6611374/6611283

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்